ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2247/12 - 2021 සැප්තැම්බර් මස 29 වැනි බදාදා - 2021.09.29

*2247/12 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 29 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி(கட்டுப்பாட்டுச்) சட்டம்**

*1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டம் மற்றும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச்சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் 4 (1) ஆம் உபபிரிவு மற்றும்14 பிரிவு ஆகியவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் பிரிவு 20 இன் மூலம் எனக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களின் அடிப்படையில், நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ ஆகிய நான் பின்வரும் ஒழுங்குவிதிகளை பிரகடனப்படுத்துகின்றேன்.*

**பசில் ராஜபக்ஷ,**
நிதி அமைச்சர்.

நிதி அமைச்சு,
கொழும்பு 01,
2021, செத்தெம்பர் 29.

**ஒழுங்குவிதிகள்**

1. இவ்வொழுங்குவிதிகள் 2021 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்பட முடியும்.
2. இந்த ஒழுங்குவிதிகள் 2021, செத்தெம்பர்30 ஆந் திகதி முதல் நடைமுறைக்கு வருதல் வேண்டும்.
3. திருத்தப்பட்டவாறான 2017, நவெம்பர் 09 ஆந் திகதிய 2044/40 ஆம் இலக்க (அதிவிசேட) வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட விசேட இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் ஒழுங்குவிதிகளின் அட்டவணை I இற்கு, 2020, ஒற்றோபர் 29

ஆந் திகதிய 2199/20 ஆம் இலக்க (அதிவிசேட) வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட 2020 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகளினால் சேர்க்கப்பட்ட பின்வரும் அட்டவணையின் நிரல் I மற்றும் II இல் விபரிக்கப்பட்ட இயைபு முறைத் தலைப்புகள் மற்றும் இயைபு முறைக் குறியீடுகளுடன் தொடர்புடைய நிரல் III மற்றும் IV இலுள்ள அதற்கு நேரொத்த பதிவுகளினால் குறிப்பிடப்பட்டுள்ள பின்வரும் பொருட்கள் நீக்கப்படல் வேண்டும்.

| | நிரல் I<br>இயைபு முறைத் தலைப்புகள் | நிரல் II<br>இயைபு முறைக் குறியீடுகள் | | நிரல் III<br>விடயம் | நிரல் IV<br>இறக்குமதிக் கட்டுப்பாட்டு உரிமம்<br>(L) |
|---|---|---|---|---|---|
| 234 | 17.01 | | | **கரும்பு அல்லது பீட் சீனி மற்றும் இரசாயன தூய சுக்ரோஸ், திண்ம வடிவத்தில்** | |
| | | 1701.99.00 | -- | மற்றவை: | |
| | | 1701.99.10 | --- | வெள்ளை படிக கரும்பு சீனி | L |
| | | 1701.99.20 | --- | வெள்ளை படிக பீட் சீனி | L |
| | | | | | |

10-112

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.